රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/පොදු/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2020.06.01

மாவட்டச் செயலாளர்,

...................................

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தை நடைமுறைப்படுத்துதல்.</u>**

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை *10/2012 (III)* இன் ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் தரமுயர்த்தல்களை விரைவாக நிறைவு செய்தல்.

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பால் தங்களது கவனத்துக்கு தயவுடன் கொண்டு வருகின்றேன்.

| | சுற்றறிக்கை இலக்கம் | வெளியிடப்பட்ட- திகதி |
|---|---|---|
| *I.* | *10/2012* | *2012.05.08* |
| *II.* | *10/2012 (I)* | *2012.06.21* |
| *III.* | *10/2012 (II)* | *2016.04.04* |
| *IV.* | *10/2012 (III)* | *2017.08.14* |

*02.* அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தின் *14* ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு *2011.08.01* ஆந் திகதிக்கு மத்திய அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் *MN4-2006 (ஏ)* சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் ஊதியம் பெறும் பட்டதாரி பதவியொன்றில் *2011.08.01* ஆந் திகதிக்கு மாகாண அரச சேவையில் ஈடுபட்டு பின்னர் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை*16/2010(1)* இற்கமைய மத்திய அரசாங்க சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இடமாற்றம் பெற்று வந்து சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்வதற்காக விருப்பம் தெரிவிக்க முடியுமாக உள்ள இறுதித் திகதி *2017.09.30* ஆக காணப்படுவதோடு, இதுவரை அவ்வாறு விருப்பம் தெரிவிக்காத உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.

*03.* இவ்வுள்ளீர்ப்புச் செயற்பாட்டினை மிக திட்டமிட்டதாகவும் துரிதமாகவும நிறைவு செய்வதற்கும் *2011.08.01* ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களை பதவியில் உறுதிப்படுத்தல், தரமுயர்த்தலை மிக விரைவாக மேற்கொள்வதன் அவசியப்பாட்டினை கவனத்திற் கொண்டு உமது மாவட்ட செயலகத்தில் / மாவட்டத்தினுள் அமைந்துள்ள பிரதேச செயலகங்களில்

சேவையாற்றும் ( என்றாலும் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களில் இணைந்து உமது மாவட்ட செயலகத்தில் / பிரதேச செயலகத்தில் சேவையாற்றபவர்களைளத் தவிர) அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ள சகல உத்தியோகத்தர்களினதும் தகவல்களைச் சேகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. மேற்கூறப்பட்ட 02 ஆம் பந்தியின் படி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்காக 2017.09.30 ஆந் திகதிக்கு முன்னர் விருப்பத்தைத் தெரிவித்துள்ள, சகல உத்தியோகத்தர்களினதும் தகவல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப [CS/DOS/Abs/Inf/2020] தயாரித்து அதன் வன்பிரதியை 2020.07.30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையிலும் மென்பிரதியை மின்னஞ்சல் முகவரியின் adcs1-dos@pubad.gov.lk ஊடாக மிக விரைவில் எனக்கு கிடைக்கச் செய்யுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன். ( இக்கடிதம் இவ் அமைச்சின் இணையத் தளத்தில் பொது நிருவாகப் பிரிவின் கீழ் அமைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உரிய பக்கத்தில் விசேட அறிவித்தல் என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ளதோடு CS/DOS/Abs/Inf/2020 மாதிரிப்படிவத்தை உமக்கு பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்).இம்மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு தகவல்களை தட்டச்சு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட எழுத்து (Font :Iskola Potha) மற்றும் அளவு (Font Size : 12) பயன்படுத்துதல் வேண்டும்.)

05. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அக் கோரிக்கைகளிலிருந்து மீள விலகிக் கொள்வதற்கான வாய்ப்பில்லை என தெரியப்படுத்துவதோடு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்கள் தொடர்பான தாபன நடவடிக்கைகளை முறைசார்ந்ததாக்கும் வகையில் உரிய திகதிக்கு முன்னர் தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

06. மேலும், இந் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவரை நேரடியாக தொடர்பு முடியுமான தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்புமாறும் தகவல்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்குமுறைக்கு ஏற்ப உமது அமைச்சு / திணைக்களத்தின் கீழ் சேவையாற்றிக் கொண்டிருக்கும் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமை வழங்குமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/. எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்